28.01.2026	375. இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்கு வசதி இல்லாத காரணத்தினால் புதிய தெருவிளக்கு வசதி அமைத்து தரக்கோரி பொதுமக்களிடமிருந்தும் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் மன்ற தீர்மானத்தின் அடிப்படையிலும், முதலமைச்சரின் தனி பிரிவிலிருந்தும், மற்றும் உங்களுடன் ஸ்டாலின் முகாமிலிருந்து வரப்பெறும் மனுக்களின் அடிப்படையில் புதியதாக 106 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் அமைக்க மின் கம்பம் மற்றும் மின் தடம் அமைக்கும் பணிக்கு மின் வாரியத்தின் மூலம் தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.45,00,000/-க்கு (ரூபாய் நாற்பத்தி	அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது.

	ஐந்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு. **அலுவலக குறிப்பு** **(ந.க.எண்.000369/2025/எம்சிஇ6)** 1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.45,00,000/-க்கு (ரூபாய் நாற்பத்தி ஐந்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம். 2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2025-26ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.	
28.01.2026	376. தஞ்சாவூர் மாநகராட்சியில் பூங்கா, விளையாடும் இடம் மற்றும் திறந்தவெளி பட்டியலை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் பிரிவு 126ன் கீழ் பிரசுரம் செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 08.12.2025 ஆம் தேதி மின்னஞ்சலில் இதற்கு ஏதுவாக பூங்கா, விளையாடும் இடம் மற்றும் திறந்தவெளி பட்டியலை அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பட்டியலை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் பிரசுரம் செய்ய ஆகும் செலவீன தொகையை இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி கோரப்படுகிறது. **அலுவலக குறிப்பு** **(ந.க.எண்.18754/1995/எம்சிஎப்1)** 1. மாமன்றம் அனுமதி அனுமதிக்கலாம்.	அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது.
28.01.2026	377. தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்) தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 349/2025. நாள் 28.04.2025-ல் மாண்புமிகு. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு எண்.4ல் கட்டுமானத்	அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது.

	தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் குடிநீர் மற்றும் இதர அடிப்படை வசதிகளுடன் கூடிய வசதி மையங்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், இதனடிப்படையில் தஞ்சாவூர் மாநகரப் பகுதியில் போதுமான இட வசதியுடன் கூடிய ஒரு இடத்தை தெரிவு செய்து வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டது. அரசாணை (நிலை) எண்89 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (ஜ2) துறை நாள்18.08.2025ல் மேற்படி வசதி மையங்கள் மாநகராட்சி ஆணையர் மூலமாக தேர்வு செய்யப்பட்ட இடங்களில் 30'×10' என்ற பரப்பளவில் முன் கூட்டியே தயாரிக்கப்பட்ட கட்டமைப்பில் (அறையில்) அமைக்கப்படும் எனவும் இவ்வாணை நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மாந7) துறையின் அ.சா.கு.எண் 4433.மா.ந.7/2025-2/நாள் 20.06.2025ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்13457/2025/மாநி3/ நாள்11.06.2025ல் மேற்படி அரசாணையில் தெரிவித்தவாறு இடம் தெரிவு செய்து வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி அரசாணையில் தெரிவித்தவாறு வெள்ளைப்பிள்ளையார் கோவில் அருகே மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 30'×10'×10' அளவில் முன்கூட்டியே தயாரிக்கப்படும் கட்டமைப்பு (அறை) அமைத்துக் கொள்ள தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறைக்கு தடையின்மை சான்று வழங்கலாம். **அலுவலக குறிப்பு** **(ந.க.எண். 8388/2025/எம்சிஎப்5)** 1. மாமன்றம் அனுமதிக்கலாம்.	
28.01.2026	378. இந்திய தேர்தல் ஆணையத்தின் க டிதம் எண்.9300/Ele-1/2025/1 நாள்.28.10.2025ம் தேதியில் வாக்காளர்	அலுவலக குறிப்பை

		பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) மேற்கொள்ள கணக்கெடுக்கும் பணி 04.11.2025 ம் தேதி முதல் 04.12.2025 காலம் நிர்ணயம் செய்து (Time Bound) பணிகள் முடிக்க அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர், வாக்காளர் பதிவு அலுவலர், உதவி வாக்காளர் பதிவு அலுவலர் ஆகியோர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இது குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட 200 பாகங்களுக்கு உதவி வாக்காளர் பதிவு அலுவலர்/மாநகராட்சி ஆணையர் விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. எனவே, ஆட்டோக்கள் மூலம் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவுத் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு** **(ந.க.எண்.8112/2025/அ10)** 1. மாமன்றம் அனுமதிக்கலாம். 2. அவசர அவசியம் கருதி பிரிவு 57 ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.	அங்கீகரிக்க தீர்மானிக்கப்படுகிறது.
28.01.2026	380.	தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தஞ்சாவூர் நகரம், சர்வே வார்டு எண்.01, பிளாக் எண். 41, நகரளவு எண்கள்.1569/4A-ல். 960 ச.மீ இடத்தை குடியிருப்பு மனைப்பிரிவு செய்வதற்கு அனுமதி கோரி திருமதி. தனலெட்சுமி த/பெ ராஜசேகர் (1), சாமிநாதன் த/பெ அய்யாசாமி (2), குமணன் த/பெ அய்யாசாமி (3), நாகலெட்சுமி அவர்களது வாரிசுதாரர்கள் எஸ். சோமசுந்தரம் த/பெ சொக்கலிங்கம் (4), பத்மாவதி க/பெ அருண் (5), மோகனபிரியா க/பெ செந்தில் நாதன் (6) என்பவர்களால் விண்ணப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் உதவி இயக்குநர் தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களது திட்ட அனுமதி எண் 34/2024 மற்றும் மனை பிரிவு வரைப்படத்திற்கு ம.வ/ந.உ.தி.கு. (த மா2) எண் SWP-15-2024 என எண்ணிடப்பட்டு குடியிருப்பு மனைப்பிரிவுக்கு	ஒத்திவைக்க தீர்மானிக்கப்படுகிறது.

	தொழில்நுட்ப அனுமதி ந.க.எண். J61R/86/07 (14737/2024/TCP. நாள். 03.05.2024 -ல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள், உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட பொது இடம் 11.43 சதுர மீட்டர் (123 சதுர அடி) பரப்பளவு, மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு (TANGEDCO) ஒதுக்கீடு செய்யப்பட்ட 7.80 ச.மீ பரப்பளவு இடத்தையும் அரசாணை 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 09.12.2020 மற்றும் அரசாணை 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 16.07.2022-ன் படி மாநகராட்சி ஆணையர் பெயரிலும் மற்றும் மனுதாரரிடமிருந்து உதவி இயக்குநர் அவர்களால் முறையே ஆவண எண். 1163/2024, நாள் 25.03.2024 ம் தேதியில் தானமாக பெறப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் மனுதாரரால் சாலைகள் மற்றும் பிற அடிப்படை வசதிகள் அனைத்தும் தன் சொந்த செலவில் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது என பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, உதவி இயக்குநர் அவர்களால் அளித்துள்ள தொழில்நுட்ப ஒப்புதலின் படி மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மாமன்ற ஒப்புதல் கோரப்படுகிறது. **அலுவலக குறிப்பு** **(ந.க.எண். 502/2025/MCF1)** 1. மேற்படி மனைப்பிரிவில் மனுதாரர் தனது சொந்த செலவில் அடிப்படை வசதிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளதால் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.	
28.01.2026	381. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தஞ்சாவூர் மாநகராம், தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு எண்.7,பிளாக் 02, நகரளவு எண்கள். 47/10,48& 53 (நீலகிரி தெற்கு தோட்டம்) கிராமம் புலஎண்.173/A1. 5,6 -ல் அமைந்துள்ள 2482.40 ச.மீ (26,720.55 சதுரடி) பரப்பளவில்	ஒத்திவைக்க தீர்மானிக்கப்படுகிறது.

	ஸ்ரீராம் கூட்டுறவு காலனி மனைப்பிரிவினை ஒட்டியுள்ள இடத்தினை குடியிருப்பு மனைப்பிரிவுகளாக பிரிக்க அனுமதி கோரி M/S BoomiBalagan Properties/ Proprietor திருமதிப்ரியா (பவர்ஏஜெண்ட்) என்பவர் விண்ணப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் உதவி இயக்குநர் தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் கடிதம் ந.க.எண். oF1HEGGO (46437)/2025TD-3/2025/TCP. நாள்.27.05.2025-ல் ம.வ/த.உ.தி எண்.SWP/24/2025. திட்ட அனுமதி எண்.41/2025 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் (1) தென் வடலான 40 அடி திட்ட சாலை -1(F1-F1)(2) தென் வடலான 40 அடி திட்ட சாலை-2(3) கிழ மேலான 7.20 மீ அகல சாலை -3(4) தென் வடலான 7.20 மீ அகல சாலை -4(5) மூலை முடுக்குகள் 50.00 சதுரடி பரப்பளவு (6) பொது உபயோகம் (Public Purpose) 110.00 சதுரடி பரப்பளவுள்ள இடம் (7) மின்சார வாரியத்திற்குண்டான இடம் 111.00 சதுரடி பரப்பளவு இடம் ஆகியவைகள் அரசாணை 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள். 09.12.2020 மற்றும் அரசாணை 141, வீட்டு வசதி மற்றும் நகர் புறவளர்ச்சித்துறை நாள். 16.07.2022.ன் படி மாநகராட்சி ஆணையர் பெயரில் மனுதாரரிடமிருந்து உதவி இயக்குநர் அவர்களால் ஆவண எண்.3208/2025 -ன் மூலம் 17.05.2025 ம்தேதியில்தானமாகபெறப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் மனதாரரால் சாலைகள் மற்றும் பிற அடிப்படை வசதிகள் தன் சொந்த செலவில் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது என பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, உதவி இயக்குநர் அவர்களால் அளித்துள்ள தொழில் நுட்ப ஒப்புதலின்படி மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனுதாரரால் உரிய தொகை செலுத்திய பின் இறுதி ஒப்புதல் வழங்க மாமன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.	

	அலுவலககுறிப்பு **(ந.க.எண்.6603/2025/எம்சிஎப்1)** 1. மேற்படி மனைப்பிரிவில் மனதாரர் தனது சொந்த செலவில் அடிப்படை வசதிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளதால் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.	
28.01.2026	382. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தஞ்சாவூர் மாநகரம் .தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு எண்.6, பிளாக் 22, நகரளவு எண்கள்.1293/1,3,5,6,7,8,9,10,11,12,13 & 14-ல் அமைந்துள்ள 60525.00 சதுரடி பரப்பளவில் இடத்தினை குடியிருப்பு மனைப்பிரிவுகளாக பிரிக்க அனுமதி கோரி திரு. G. சந்திரசேகரன் மற்றும் பலர் விண்ணப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் உதவி இயக்குநர் தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் கடிதம் ந.க.எண்.C746PAVZ(28519)-2024-TD3-2024-TCP. நாள் 10.10.2024-ல் ம/வ/த.உ.திஎண். DTCP/TNJ/SWP/TLPA/37/2024. திட்ட அனுமதி எண்.82/2024 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் (1) தென் வடலான 9 மீட்டர் அகல சாலை -1(2) தென் வடலான 10 மீட்டர் அகல சாலை -2(3) தென் வடலான 10 மீட்டர் அகல சாலை -3(4) தென் வடலான 7.2 மீட்டர் அகல சாலை -4(5) பூங்கா 410.34 சதுர மீட்டர் பரப்பளவு இடம் (6) பொது உபயோகம் (Public Purpose) 23.31 சதுர மீட்டர் பரப்பளவுள்ள இடம் (7) மின்சார வாரியத்திற்குண்டான இடம் 23.08 ச.மீ பரப்பளவு இடம் ஆகியவைகள் அரசாணை 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020 மற்றும் அரசாணை 141, வீட்டு வசதி மற்றும் நகர் புறவளர்ச்சித்துறை நாள்.16.077.2022-ன் படி மாநகராட்சி ஆணையர் பெயரில் மனுதாரரிடமிருந்து உதவி இயக்குநர் அவர்களால் ஆவண எண்.5325/2024-ன் மூலம் 07.08.2024 ம் தேதியில் தானமாக பெறப்பட்டுள்ளது.	ஒத்திவைக்க தீர்மானிக்கப்படுகிறது.

	மேற்படி மனைப்பிரிவில் மனுதாரரால் சாலைகள் மற்றும் பிற அடிப்படை வசதிகள் தன் சொந்த செலவில் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது என பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, உதவி இயக்குநர் அவர்களால் அளித்துள்ள தொழில் நுட்ப ஒப்புதலின் படி மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனுதாரரால் உரிய தொகை செலுத்தியபின் இறுதி ஒப்புதல் வழங்க மாமன்ற ஒப்புதல் கோரப்படுகிறது. **அலுவலக குறிப்பு** **(ந.க.எண்.12597/2024/எம்சிஎப்1)** 1. மேற்படி மனைப்பிரிவில் மனுதாரர் தனது சொந்த செலவில் அடிப்படை வசதிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளதால் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.	
28.01.2026	383. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தஞ்சாவூர் மாநகரம், தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு எண்.2, பிளாக் 76, நகரளவு எண்கள்.2387/2-ல் 9950 ச.மீ பரப்பளவுள்ள இடத்தை குடியிருப்பு மனைப்பிரிவு செய்வதற்கு அனுமதி கோரிதிரு. M. ஜமீல் அகமது என்பவர் விண்ணப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் உதவி இயக்குநர் தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் கடிதம் ந.க.எண்.TGNTZRGI (39117)-2024-TD/2-2024-TCP, நாள் 27.12.2024-ல் ம.வ./த.உ.திஎண்.SWP/54/2024. திட்ட அனுமதி எண்.111/2024 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் (1) தென் வடலான 10 மீ அகல சாலை -1(2) கிழமேலான 7.20 மீஅகலசாலை -2 (3) கிழமேலான 7.20மீஅகலசாலை -3 (4) கிழமேலான 7.20 மீஅகலசாலை -4 (5) கிழ மேலான 7.20மீ அகல சாலை -5 (6) கிழ மேலான 9.00 மீ அகல சாலை -6 (7) கிழ மேலான 9.00 மீ அகல சாலை -7 (8) ஏழு எண்ணிக்கையிலான மூலை முடுக்குகள் (9) பொது உபயோகம் (Public Purpose) 500 சதுரடி	ஒத்திவைக்க தீர்மானிக்கப்படுகிறது.

	பரப்பளவுள்ள இடம் (10) மின்சார வாரியத்திற்குண்டான 579 சதுரடி பரப்பளவு இடம் ஆகியவைகள் அரசாணை எண். 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020 மற்றும் அரசாணை 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022 -ன் படி இடம் மாநகராட்சி ஆணையர் பெயரில் மனுதாரரிடமிருந்து உதவி இயக்குநர் அவர்களால் ஆவண எண்.5195/2024-ன் மூலம் 24.12.2024ம் தேதியில் தானமாக பெறப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் மனுதாரரால் சாலைகள் மற்றும் பிற அடிப்படை வசதிகள் தன் சொந்த செலவில் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது என பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பாதாள சாக்கடை குழாய் பதிக்கும் பணிக்காக மதிப்பீட்டுத்தொகை ரூ.10,50,000 மற்றும் மனைப்பிரிவு பராமரிப்புக்கட்டணம் வைப்புத்தொகையாக ரூ.2,50,000/- ஆக கூடுதல் 13,00,000/- மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. (பற்றுச்சீட்டு எண்.107/05/1/25-26/0009616. நாள் 11.09.2025) எனவே, உதவி இயக்குநர் அவர்களால் அளித்துள்ள தொழில் நுட்ப ஒப்புதலின் படி மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மாமன்ற ஒப்புதல் கோரப்படுகிறது. **அலுவலககுறிப்பு** **(ந.க.எண்.14937/2024/எம்சிஎப்1)** 1. மேற்படி மனைப்பிரிவில் மனுதாரர் தனது சொந்த செலவில் அடிப்படை வசதிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளதால் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.	
28.01.2026	384. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தஞ்சாவூர் மாநகரம், தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு எண்.6, பிளாக் 23, நகரளவு எண்கள்.1301/2-ல் 12.150 ச.மீ பரப்பளவுள்ள இடத்தை குடியிருப்பு மனைப்பிரிவு செய்வதற்கு அனுமதிகோரி திரு. P. குழந்தைவேல் மற்றும் பலர் விண்ணப்பிக்ககப்பட்டதன்	ஒத்திவைக்க தீர்மானிக்கப்படுகிறது.

	அடிப்படையில் உதவு இயக்குநர் தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் கடிதம் ந.க.எண்.TPHI2968(41248)/2025/TD-3/TCP, நாள்.14.02.2025-ல் ம.வ/ந.ஊ.து.இஎண்.SWP/08/2025, திட்ட அனுமதி எண்.12/2025 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் (1) கிழ மேலான 7.20 மீ அகல 531.36 ச.மீட்டர் விஸ்தீரணம் சாலை -1(2) கிழ மேலான 7.20 மீ அகல 531.66 ச.மீட்டர் விஸ் தீரணம் சாலை -2(3) கிழ மேலான 7.20 மீ அகல 532.03 ச.மீட்டர் விஸ் தீரணம் சாலை -3 (4) கிழ மேலான 7.20 மீ அகல 597.25 ச.மீட்டர் விஸ் தீரணம் சாலை -4 (5) தென் வடலான 9.00 மீஅகல 251.195 ச.மீட்டர் விஸ் தீரணம் சாலை -5 (6) தென் வடலான 9.00 மீ அகல 1032.57 ச.மீட்ட,ர் விஸ் தீரணம் -6 (7) மூலை முடுக்குகள் 187.50 சதுரடி பரப்பளவு (8) பொது உபயோகம் (Public Purpose) 501.25 சதுரடி பரப்பளவுள்ள இடம் (9) மின்சார வாரியத்திற்குண்டான இடம் 478.50 சதுரடி பரப்பளவு (10) பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட ஒழுங்கற்ற வடிவமுள்ள 9385 சதுரடி இடம் ஆகியவைகள் அரசாணை 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள். 09.12.2020 மற்றும் அரசாணை 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022-ன் படி மாநகராட்சி ஆணையர் பெயரில் மனுதாரரிடமிருந்து உதவி இயக்குநர் அவர்களால் ஆவண எண். 683/2025- ன் மூலம் 03.02.2025 ம் தேதியில் தானமாக பெறப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் மனுதாரரால் சாலைகள் மற்றும் பிற அடிப்படை வசதிகள் தன் சொந்த செலவில் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது என பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரரால் பராமரிப்புக்கட்டணம் வைப்புத்தொகையாக ரூ.3,00,00/- மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. (பற்றுச்சீட்டு எண். 107/05/1/25-26/0009557, நாள். 10.09.2025) எனவே, உதவி இயக்குநர் அவர்களால் அளித்துள்ள தொழில் நுட்ப ஒப்புதலின் படி மேற்படி	

	குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மாமன்ற ஒப்புதல் கோரப்படுகிறது. **அலுவலககுறிப்பு** **(ந.க.எண்.2442/2025/எம்சிஎப்1)** 1. மேற்படி மனைப்பிரிவில் மனுதாரர் தனது சொந்த செலவில் அடிப்படை வசதிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளதால் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.	
28.01.2026	385. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தஞ்சாவூர் மாநகரம், தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு எண்.1, பிளாக் 42, நகரளவு எண்கள்.1590/1, 1597, 15988/1 & 1599/3 -ல் 8853.50 ச.மீ பரப்பளவுள்ள இடத்தை குடியிருப்பு மனைப்பிரிவு செய்வதற்கு அனுமதி கோரி திரு. பாலகிருஷ்ணன் மற்றும் 8 நபர்கள் விண்ணப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் உதவி இயக்குநர் தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் கடிதம் ந.க.எண்.IJ9UU61Y(32913)/2024TD?2/2024/TCP, நாள் 23.11.2024-ல் ம.வ/த.உ.தி எண்.SWP-43-2024, திட்ட அனுமதி எண். 92/2024 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் (1) கிழ மேலான 12.20மீ அகல (F5-F5) திட்ட சாலை எண்.2 (3) தென் வடலான 12.20மீ அகல (F3-F3) திட்ட சாலை எண்.3 விரிவாக்கம் (4) கிழ மேலான 7.20 மீ அகல மனைப்பிரிவு சாலை எண்.4 (5) தென் வடலான 7.20மீ அகல மனைப்பிரிவு சாலை எண்.5 (6) கிழ மேல் 7.20மீ அகல மனைப்பிரிவு சாலை எண்.6 (7) தென் வடலான 7,20 மீஅகல சாலை எண்.7 (8) தென் வடல் 12.20மீ அகல சாலை எண்.88 (9) பொது உபயோகம் (Public Purpose) 36.70 ச.மீ பரப்பளவுள்ள இடம் (9) மின்சார வாரியத்திற்குண்டான இடம் 36.51 ச.மீ பரப்பளவு இடத்தையும், ஆகியவைகள் அரசாணை 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020 மற்றும் அரசாணை 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள். 16.07.2022-ன் படி இம்மாநகராட்சி ஆணையர் பெயரில் மனுதாரரிடமிருந்து உதவி இயக்குநர் அவர்களால் ஆவண எண்.4455/2024-ன்	ஒத்திவைக்க தீர்மானிக்கப்படுகிறது.

	மூலம் 06.11.2024ம் தேதியில் தானமாக பெறப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் மனதாரரால் சாலைகள் மற்றும் பிற அடிப்படை வசதிகள் தன் சொந்த செலவில் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது. என பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பராமரிப்புக்கட்டணம் வைப்புத்தொகையாக ரூ.2,50,000/- மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. (பற்றுச்சீட்டு எண். 107/05/1/25/0009788, நாள். 15.09.2025) எனவே, உதவி இயக்குநர் அவர்களால் அளித்துள்ள தொழில் நுட்ப ஒப்புதலின்படி மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மாமன்ற ஒப்புதல் கோரப்படுகிறது. **அலுவலககுறிப்பு** **(ந.க.எண்.14174/2024/எம்சிஎப்1)** 1. மேற்படி மனைப்பிரிவில் மனதாரர் தனது சொந்த செலவில் அடிப்படை வசதிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளதால் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.	
28.01.2026	386. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தஞ்சாவூர் மாநகரம், தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு எண்.7 ,பிளாக்5, நகரளவு எண்கள் 22-ல் அமைந்துள்ள 4097.57 சதுர மீட்டர் பரப்பளவில் இடத்தினை குடியிருப்பு மனைப்பிரிவுகளாக பிரிக்க அனுமதி கோரி திரு. A. நாகராஜன் என்பவர் விண்ணப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் உதவி இயக்குநர் தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் கடிதம் ந.க.எண்.HS5PUA6H(38063)/2024/TD2/2025/TCP. நாள் 03.01.2025-ல் ம.வ/த.உ.தி எண்.2/2025, திட்ட அனுமதி எண். 2/2025 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் (1) தென் வடலான 1004.27 சதுர மீட்டர் அகல சாலை -1 (2) பொது உபயோகம் (Public Purpose) 16.27 சதுர மீட்டர் பரப்பளவுள்ள இடம் (3) மின்சாரவாரியத்திற்குண்டான இடம் 15.93 ச.மீ பரப்பளவு இடம் (4) மூலை முடுக்குகள் 4.50 ச.மீ பரப்பளவு	ஒத்திவைக்க தீர்மானிக்கப்படுகிறது.

	இடம் ஆகியவைகள் அரசாணை 181, வீட்டு வசதி மற்றும் நகர் புறவளர்ச்சித்துறை நாள். 09.12.2020 மற்றும் அரசாணை 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022-ன் படி மாநகராட்சி ஆணையர் பெயரில் மனுதாரரிடமிருந்து உதவி இயக்குநர் அவர்களால் ஆவண எண். 8466/2024 -ன் மூலம் 12.12.2024 ம் தேதியில் தானமாக பெறப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் மனதாரரால் சாலைகள் மற்றும் பிற அடிப்படை வசதிகள் தன் சொந்த செலவில் அமைக்கப்பட்டுள்ளது என பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, உதவி இயக்குநர் அவர்களால் அளித்துள்ள தொழில்நுட்ப ஒப்புதலின்படி மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனுதாரரால் உரிய தொகை செலுத்திய பின் இறுதி ஒப்புதல் வழங்க மாமன்ற ஒப்புதல் கோரப்படுகிறது. **அலுவலககுறிப்பு** **(ந.க.எண்.1056/2025/எம்சிஎப்1)** 1. மேற்படி மனைப்பிரிவில் மனதாரர் சொந்த செலவில் அடிப்படை வசதிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளதால் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.	
28.01.2026	387. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தஞ்சாவூர் மாநகரம், தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு எண்.6 ,பிளாக் 25, நகரளவு எண்கள்3142/2A-ல் அமைந்துள்ள 3149.00ச.மீ பரப்பளவில் இடத்தினை குடியிருப்பு மனைப்பிரிவுகளாக பிரிக்க அனுமதி கோரி திரு. A. செல்வம் என்பவர் விண்ணப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் உதவி இயக்குநர் தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் கடிதம் ந.க.எண்.DXD72TS (14045)/2023/TD-3/2023/TCP. நாள் 09.05.2023-ல் ம.வ/த.உ.திஎண்.SWP/50/2023, திட்ட அனுமதி எண். 97/2023 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் (1) தென் வடலான சாலை -1(2) கிழ மேலான சாலை -2 (3) தென் வடலான	ஒத்திவைக்க தீர்மானிக்கப்படுகிறது.

சதுரடி சாலை -3 (4) மூலை முடுக்குகள் (5) பொது உபயோகம் (Public Purpose) 131.643 சதுரடி பரப்பளவுள்ள இடம் (6) மின்சாரவாரியத்திற்குண்டான இடம் 15.92ச.மீ பரப்பளவு இடம் (4) மூலை முடுக்குகள் 4.50 ச.மீ பரப்பளவு இடம் ஆகியவைகள் அரசாணை 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள். 09.12.2020 மற்றும் அரசாணை 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022-ன் படி மாநகராட்சி ஆணையர் பெயரில் மனுதாரரிடமிருந்து உதவி இயக்குநர் அவர்களால் ஆவணஎண். 8554/2023 -ன் மூலம் 01.12.2023ம் தேதியில் தானமாக பெறப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் மனதாரரால் சாலைகள் மற்றும் பிற அடிப்படை வசதிகள் தன் சொந்த செலவில் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது. என பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், (1) பாதாள சாக்கடை குழாய் பதிக்கும் பணிக்காக மதிப்பீட்டுத்தொகை ரூ.6,00,000 (2) பொது ஒதுக்கீடு இடங்களுக்கு முள்வேலி அமைப்பதற்குண்டான தொகையாக ரூ.21,000/- மற்றும் மனைப்பிரிவு பராமரிப்புக்கட்டணம் வைப்புத்தொகை ரூ.1,00,000/-ஆக கூடுதல் ரூ.7,21,000/-மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. (பற்றுச்சீட்டு எண்.107/05/1/25-26/0010862. நாள் 29.09.2025)

எனவே, உதவி இயக்குநர் அவர்களால் அளித்துள்ள தொழில்நுட்ப ஒப்புதலின் படி மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மாமன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு **(ந.க.எண்.12860/2023/எம்சிஎப்1)**

1. மேற்படி மனைப்பிரிவில் மனுதாரர் தனது சொந்த செலவில் அடிப்படை வசதிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளதால் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.

28.01.2026	388. தஞ்சாவூர் மாநகராட்சி மாநகர்நல பிரிவு (பிறப்பு / இறப்பு) பதிவறை பிரிவிற்கு அரசு இராஜாமிராசுதார் மருத்துவமனையில் இருந்து 2018 முதல் 2023 வரையிலான பிறப்பு / இறப்பு பதிவேடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து 2018 முதல் 2023 வரையிலான இறப்பு பதிவேடுகள் ஒப்படைக்கப்பட உள்ளதால் இப்பதிவேடுகளை பராமரிப்பதற்கு 10-எண்ணிக்கையிலான ரேக்கைகளை புதிதாக கொள்முதல் செய்யும் பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,10,000/- (ரூபாய் ஒரு இலட்சத்தி பத்தாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு. **அலுவலக குறிப்பு** **(ந.க.எண்.17298/2025/எச்2)** 1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.1,10,000/- (ரூபாய் ஒரு இலட்சத்தி பத்தாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம். 2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2025-26ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.	அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது.
28.01.2026	389. தஞ்சாவூர் மாநகராட்சியின் மாற்றுத்திறன் கொண்ட மாமன்ற நியமன உறுப்பினருக்கான விண்ணப்பங்கள் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்பட்டு, மாவட்ட அளவிலான குழு மூலம் பரிந்துரை செய்யப்பட்டு, மாற்றுத்திறனாளிகளுக்கான மாமன்ற உறுப்பினராக நியமனம் செய்ய தேர்வு செய்யப்பட்ட திரு. ந. தமிழ்செல்வன், த/பெ. நடராஜன் அவர்கள் 27.11.2025 அன்று முற்பகல் பதவி ஏற்றுக்கொண்ட விவரத்தினையும், அரசிடமிருந்து வரப்பெற்ற கடிதத்தினையும் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **அலுவலக குறிப்பு** **(ந.க.எண்.14300/2025/உ.தே.1)** 1. மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.	பதிவு செய்திட தீர்மானிக்கப்படுகிறது.

28.01.2026

390. தஞ்சாவூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவு பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடு வைப்பு அறைக்கு பிறப்பு/இறப்பு சான்றிதழ்கள் அரசாணை நிலை HEALTH AND FAMILY WELFARE(AB2) DEPARTMENT இருந்து வரப்பெற்ற G.O.(Ms) No.351 நாள்:31.07.2025.-ன் படி புதியதாக வரப்பெற்ற கீழ்கண்ட விபரங்கள்,

வ.எண்	படிவங்கள்	எண்ணிக்கை
1	FORM-1(BIRTH REPORT)	10,000
2	FORM-1A (BIRTH REPORT FOR ADOPTED CHILD)	500
3	FORM-2(DEATH REPORT)	10,000
4	FORM-3 (STILL BIRTH REPORT)	600
5	FORM-4 (MEDICAL CERTIFICATE OF CAUSE OF DEATH)	10,000
6	FORM -4A (MEDICAL CERTIFICATE OF CAUSE OF DEATH)	5,000
7	FORM -5(BIRTH CERTIFICATE)	50,000
8	FORM -6 (DEATH CERTIFICATE)	50,000
9	FORM-7(BIRTH REGISTER)	-
10	FORM-8 (DEATH REGISTER)	-
11	FORM -9(STILL BIRTH REGISTER)	-
12	FORM-10(NON-AVAILABILITY CERTIFICATE)	-
13	FORM-11(SUMMARY MONTHLY REPORT OF BIRTHS	50
14	FORM-12(SUMMARY MONTHLY REPORT OF DEATHS)	50
15	FORM -13 (SUMMARY MONTHLY REPORT OF STILL BIRTHS)	50
16	FORM-14 (DECLARATION FORM)	20,000
17	FORM -15 (CONTROL REGISTER FOR THE YEAR – PART A)	50
18	FORM-16 (FORM FOR APPEAL)	100

அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது.

	ஆகிய படிவங்களை TAMIL NADU MULTIPURPOSE INDCO SERVE, தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., Ind.No.13/Try , திருச்சிராப்பள்ளி நிறுவனத்திடமிருந்து புதியதாக அச்சடித்து வழங்கிட ஆகும் உத்தேச செலவினத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு** **(ந.க.எண். 000335 /2026/H2)** 1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.	
28.01.2026	391. தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட இடங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய சிறப்பு திட்டங்களில் ஒன்றான "**நலம் காக்கும் ஸ்டாலின்**" திட்ட சிறப்பு மருத்துவ முகாம்கள் 26.12.2025 மற்றும் பிப்ரவரி 2026ல் நடைபெற உள்ளதால் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/-க்கு (ஐந்து இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு** **(ந.க.எண்.14464/2025/எச்.6)** 1) மாமன்றம் அனுமதிக்கலாம் 2) பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட அலுவலக நடவடிக்கைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.	அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது.
28.01.2026	392. தஞ்சாவூர் மாநகராட்சி 51 வார்டுகளிலும் பொது சுகாதார பிரிவு மூலம் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்சமயம் வடகிழக்கு பருவமழை காலமாக இருப்பதால் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு வீடு, வீடாக சென்று விழிப்புணர்வு பணி மேற்கொள்ள 55,000 டெங்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை அச்சடிக்கும் பணி, 55,000 டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி ஸ்டிக்கர்கள் அச்சடிக்கும் பணி மற்றும் PYRETHRUM EXTRACT 2% - 300 லிட்டர், TEMEPHOS 50%	அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது.

	EC – 200 லிட்டர் ஆகியவை வாங்கி வழங்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு** **(ந.க.எண்.13986/2025/எச்.8)** 1) மாமன்றம் அனுமதிக்கலாம். 2) பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் ஏற்கலாம். 3) மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை 2025-2026ம் ஆண்டு பொது நிதியில் மேற்கொள்ளலாம்.	
28.01.2026	393. தஞ்சாவூர் மாநகராட்சி 51 வார்டுகளிலும் பொது சுகாதார பிரிவு மூலம் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்சமயம் வடகிழக்கு பருவமழை காலமாக இருப்பதால் தொற்றுநோய் தடுப்பு பணியினை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு நீர்த்த சுண்ணாம்பு – 65000 கிலோ, பிளீட்சிங் பவுடர் – 48000 கிலோ, பினாயில் – 7 000 லிட்டர் ஆகியவை வாங்கி வழங்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.36,00,000/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு** **(ந.க.எண்.13988/2025/எச்.8)** 1) மாமன்றம் அனுமதிக்கலாம். 2) பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் ஏற்கலாம். 3) மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை 2025-2026ம் ஆண்டு பொது நிதியில்	அலுவலக குறிப்பை ஏற்க தீர்மானிக்கப்படுகிறது.

	மேற்கொள்ளலாம்.	
28.01.2026	394. தஞ்சாவூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் அனைத்து கோட்ட நிரந்தர தூய்மை பணியாளர்கள் 240 நபர்களுக்கு எதிர்வரும் மழை காலத்தை முன்னிட்டு பாதுகாப்பு உபகரணங்களான மழைகோட்டு – 250 எண்ணிக்கை, ஒளிரும் மேல்சட்டை ஒரு செட் – 250 எண்ணிக்கை, கையுறை 2 செட் – 250 எண்ணிக்கை ஆகியவை வாங்கி வழங்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அலுவலக குறிப்பு (ந.க.எண்.13987/2025/எச்.8) 1. மாமன்றம் அனுமதிக்கலாம். 2. பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ் நிறுவனத்தின் மூலம் வாங்கி வழங்கும் பணி மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் ஏற்கலாம். 3. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை 2025-2026ம் ஆண்டு பொது நிதியில் மேற்கொள்ளலாம்.	அலுவலக குறிப்பை ஏற்க தீர்மானிக்கப்படுகிறது.
28.01.2026	395. தஞ்சாவூர் மாநகராட்சிமாநகர்நல பிரிவு காம்பேக்டர் வாகனம் எண். TN49BE3687-க்கு 31.12.2025 உடன் சாலை வரி முடிவடைவதால் உடனடியாக செலுத்க்கோரி வட்டார போக்குவரத்து அலுவலகத்திலிருந்து நோட்டீஸ் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி வாகனத்திற்கு சாலை வரி புதுப்பிப்பதற்கான உத்தேச செலவினம் ரூ.30,000/-க்கு (முப்பதாயிரத்திற்கு மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.	அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது.

	அலுவலக குறிப்பு **(ந.க.எண்.17506/2025/எச்.8)** 1. மாமன்றம் அனுமதிக்கலாம். 2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகையை செலுத்த மாமன்றம் அனுமதி வழங்கலாம்.	
28.01.2026	396. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 51 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி நடவடிக்கையாக வீடுகள் தோறும் கொசுப்புழு அழிக்கும் பணிக்கு தினக்கூலி பணி அடிப்படையில் 140 களப்பணியாளர்களைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் திரு.திலீப்குமார், தஞ்சாவூர் ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்த காலம் 31.03.2026 உடன் முடிவடைய உள்ளதால் அது சமயம் தமிழ்நாடு சட்ட மன்ற தேர்தல் நடைபெற உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள இயலாத சூழ்நிலையில் மேற்படி நிறுவனத்திற்கு 01.04.2026 முதல் 31.07.2026 வரை நான்கு மாதங்களுக்கு மட்டும் அதே ஒப்பந்ததாரரைக் கொண்டு மாவட்ட ஆட்சியர் அவர்களது செயல்முறை உத்திரவு ந.க.எண்.6805/2024/ஜி2 நாள்.26.09.2024ம் தேதியின் படி தெரிவிக்கப்பட்ட ஊதிய விகிதப்படி 140 களப்பணியாளர்களைக் கொண்டு கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்திடவும், அதற்காகும் உத்தேச செலவினத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு** **(ந.க.எண். 8933/2021/எச்.8)** 1) மாமன்றம் அனுமதிக்கலாம் 2) மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை 2026 – 2027 ஆம் ஆண்டு பொது நிதியில் மேற்கொள்ளலாம்.	அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது.

28.01.2026	397. தஞ்சாவூர் மாநகராட்சி அலுவலகத்தை தூய்மையாக பராமரிக்கும் பொருட்டு 2025-26ம் ஆண்டிற்கு தேவையான கிருமிநாசினிகளான சோப்ஆயில், பினாயில், லெமன்கிராஸ்சென்ட், வாட்டர்மாப், டைல்ஸ்விளக்கமார், மொரம், வாட்டர்வைபர் , ஒட்டடகுச்சிபிளாஸ்டிக் குப்பை தொட்டி மற்றும் மாநகராட்சி அலுவலகத்தை தூய்மையாக பராமரிக்க தேவையான இதர பொருட்கள் ஆகியவை வாங்கி வழங்கும் பணி 2025- 2026ம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.25,000/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு** **(ந.க.எண்.15848/2025/எச்.8)** 1) மாமன்றம் அனுமதிக்கலாம். 2) பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தஞ்சாவூர் மாவட்ட மாநில அரசு ஊழியர்கள் நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை, வரை எண்.டி.990, பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோர்ட் ரோடு, தஞ்சாவூர் நிறுவனத்திடம் பெற்று வழங்கிட இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் ஏற்கலாம். 3) மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை 2025-2026ம் ஆண்டு பொது நிதியில் மேற்கொள்ளலாம்.	அலுவலக குறிப்பை ஏற்க தீர்மானிக்கப்படுகிறது.
28.01.2026	398. மரியாதைக்குரிய முதன்மைச்செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் மரியாதைக்குரிய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 05.01.2026ம் தேதிய காணொலி காட்சி ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்க, 14.01.2026 அன்று தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட நான்கு மண்டலங்களிலும் சமத்துவ பொங்கல் விழா நடத்தும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.	அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது.

	அலுவலககுறிப்பு **(ந.க.எண்.000001/2026/எச்.8)** 1) மாமன்றம் அனுமதிக்கலாம் 2) பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட அலுவலக நடவடிக்கைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.	
28.01.2026	399. திரு.சு.செந்தமிழ்செல்வன் 1வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம். 1 வது வட்டத்திற்குட்பட்ட கோடியம்மன் கோயில்-புறவழிச்சாலை இணைப்பு சாலை அகலபடுத்துவதால் பழைய மின்கம்பங்கள் அகற்றப்பட்டன. அகற்றப்பட்ட மின்கம்பங்களை பள்ளியக்ரகாரம் – குலமங்களம் – களஞ்சேரி சாலையில் மற்றும் ஜம்புகாவேரிகரை – புறவழிச்சாலை இணைப்பு சாலையில் 10 மின்கம்பங்களும் அமைப்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.	முன் மொழிந்தவர்: திரு..S. செந்தமிழ்செல்வன் வழி மொழிந்தவர்: திரு. க. அய்யப்பன் நிறைவேறியது.
28.01.2026	400. திருமதி.து.சுகந்தி 3 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம். 3 வது வட்டத்திற்குட்பட்ட சுங்காந்திடல் குடியானத்தெரு இடுகாடு பழுதடைந்து உள்ளதால் அதற்கு மேற்கூரை, ஈமக்கிரியை மேடை, போர்வெல் மற்றும் கிரில்கேட் அமைத்து புதுப்பித்து தருமாறு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.	முன் மொழிந்தவர்: திருமதி.து. சுகந்தி வழி மொழிந்தவர்: திருமதி. இ. சுமதி நிறைவேறியது.
28.01.2026	401. திருமதி. இ. சுமதி 4 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம். 4 வது வட்டத்திற்குட்பட்ட கரந்தை மிளகுமாரி செட்டித்தெரு பாரதி காலனிக்கு புதிதாக பைப் லயன் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.	முன் மொழிந்தவர்: திருமதி. இ. சுமதி வழி மொழிந்தவர்: திருமதி. து. சுகந்தி நிறைவேறியது.

28.01.2026	402. திரு.டி.புண்ணியமூர்த்தி 10 வதுவார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம். 10 வது வட்டத்திற்குட்பட்ட வடவாற்றங்கரையில் உள்ள இடிந்த கருமாதி மண்டபத்தை கட்டித்தருதல். சுமார் 30 ஆண்டுக்கு முன் கட்டிய 17 சிறு கல்வெட்டுகளை புதுப்பித்தல் மற்றும் மழைநீர் வடிகால் சரி செய்தல் வடவாற்றங்கரை சாலையில் உள்ள சூரிய குளத்திற்கு தண்ணீர் வருவதற்கு உடைந்து போன சிறுபாலத்தை கட்டி தருவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.	முன் மொழிந்தவர்: திரு. டி. புண்ணியமூர்த்தி வழி மொழிந்தவர்: திரு. எஸ். பாலசுப்ரமணியன் நிறைவேறியது.
28.01.2026	403. திரு.எஸ்.பாலசுப்ரமணியன் 11 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம். 11 வது வட்டத்திற்குட்பட்ட ஒத்தவாரகார தெரு பாலாஜி நகரில் புதிய மின்கம்பம், தெருவிளக்கு அமைத்தல் மற்றும் கவாடிகார தெரு மைய பகுதியில் மின்கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.	முன் மொழிந்தவர்: திரு. எஸ். பாலசுப்ரமணியன் வழி மொழிந்தவர்: திரு. டி. புண்ணியமூர்த்தி நிறைவேறியது.
28.01.2026	404. திருமதி.எ.ஸ்டெல்லாநேசமணி-29வதுவார்டுமாமன்றஉறுப்பினர்கொடுத்துள்ளதீர்மானம். 29 வது வட்டத்திற்குட்பட்ட சின்னையாபாளையம் தெருவை ஒட்டியுள்ள அரசு உதவி பெறும் பள்ளி தூய அந்தோணியார் நடுநிலைப்பள்ளியின் முன்புறம் உள்ள காம்பவுன்ட் சுவருக்கு வெளிப்புறம் பேவர் பிளாக்கல் ஒட்டித்தருதல் மிஷன் ஆலமரத்தெரு முழு நீளத்திற்கு சாலையின் இருபுறமும் பேவர்பிளாக் ஒட்டுதல் மற்றும் காவல்கண்காணிப்பு அறை ஒன்று அமைத்து தருதல் தொடர்பாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.	முன் மொழிந்தவர்: திருமதி. எ. ஸ்டெல்லாநேசமணி வழி மொழிந்தவர்: திருமதி. வீ. செந்தில்குமாரி நிறைவேறியது.

28.01.2026	405. திரு.யூ.என்.கேசவன் 30 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம். 30 வது வட்டத்திற்குட்பட்ட கிருஷ்ணன் கோவில் முதல் தெருவில் தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் உடற்பயிற்சி கூடம் அமைத்தல் மற்றும் சௌராஷ்டிரா கீழராஜவீதியில் உள்ள சமுதாய கூடத்திற்கு வேலி அமைத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.	முன் மொழிந்தவர்: திரு.யூ.என். கேசவன் வழி மொழிந்தவர்: திரு.பா.ஜெய்சதீஷ் நிறைவேறியது.

நாள் : 30.01.2026

இடம் : தஞ்சாவூர்.

ஒம்./சண்.இராமநாதன்,
மேயர்.

// உண்மை நகல் //

மேயர்,

தஞ்சாவூர் மாநகராட்சி.

பெறுநர்

1. மாவட்ட ஆட்சித்தலைவர், வளர்ச்சி பிரிவு, தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 600 028 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. உதவி இயக்குநர்,உள்ளாட்சி நிதித்தணிக்கை, உடன் தணிக்கை பிரிவு, தஞ்சாவூர் மாநகராட்சி.

நகல் உதவி திட்ட அமைப்பாளர், தஞ்சாவூர் மாநகராட்சி (மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய)

" சி5 - மாமன்றக் கூட்ட எழுத்தர்.

" அலுவலக விளம்பர பலகை.